இந்தியத் தொழில்நுட்பக்கழகம், சென்னை

கற்றலில் அணுகல் ஆராய்ச்சி மையம்

மற்றும்

தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்துடன்

இணைந்து நடத்தும்

# ஒலிச் சிற்பிகளுக்கான போட்டிகள் 2025

அறிவியலின் அரங்கங்களைத் திறக்கும் ஒலியின் திறவுகோல்

மார்ச் 07, 2025 காலை 09 : 00 மணி

## கற்றலில் அணுகல் ஆராய்ச்சி மையம்

கற்றலில் அணுகல் ஆராய்ச்சி மையம் (The Accessibility Research Centre (ARC)) சென்னை ஐ. ஐ. டி யின் முக்கியமான மையங்களுள் ஒன்று. இதன் நோக்கம் தொழில் நுட்பம் மற்றும் புதிய நெறிமுறைகளின் மூலம் மாற்றுத்திறனாளிகளின் கற்றல் முறைகள் மற்றும் உள்ளடக்கிய அணுகுமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

XR திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்படும் இப்போட்டிகள், ஒலியின் மூலம் அறிவியலின் புதிய பரிணாமங்களை ஆராயும் நோக்குடையது. இந்நிகழ்வின் போது, AR மற்றும் VR தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அறிவியலைப் பயிற்றுவிப்பதற்கான எங்களது திட்டங்கள் அருங்காட்சியகத்தில் செயல்விளக்கமாக விவரிக்கப்படும்.

## தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்

தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (TNSTC) தமிழக அரசால் 1983-இல் (தமிழகச் சங்கங்கள் பதிவுச்சட்டம் (1975) இன் கீழ்) நிறுவப்பட்டது. பொது மக்கள் மற்றும் குறிப்பாக மாணவர்களிடையே அறிவியல் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. TNSTC கல்விசார் மற்றும் இணைப்பாடத்திட்ட செயல்முறைகள் வாயிலாக சிறப்பான கல்விப்பணியாற்றி வருகிறது.

## அறிவின் ஒலி

எல்லாக் குழந்தைகளுக்கும் ஒலி பிடிக்கும். குறிப்பாக மாற்றுத்திறனாளிகள், அதிலும் பார்வைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகள் ஒலியை அதிகம் விரும்புகிறார்கள். இந்தப் போட்டிகளின் மூலம் குழந்தைகளை ஒலிச்சிற்பிகளாக வடித்தெடுத்து, அறிவையும் அறிவியலையும் எல்லோருக்குமானதாக மாற்ற முனைகிறோம்.

## ஒலி வடித்தல்

ஒலி வடித்தல் என்பது பொருட்கள் மற்றும் அனுபவங்களை ஒலியின் மூலம் வெளிப்படுத்தும் ஒரு கலையாகும். இயற்கையாகவே குழந்தைகள் ஒலியோடு இயைந்திருப்பதால், அதன் மூலம் அறிவியலை அணுகுவதைக் குழந்தைகள் பெரிதும் விரும்புவார்கள்.

## பரிசுகள்:

அறிவியல் புதுமை விருது – பரிசுத்தொகை, ரூபாய்: 50,000:சிறந்த படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க மிகுந்த திட்டங்களை அறிமுகப்படுத்தும் பள்ளிகளுக்கு வழங்கப்படும்.

இரண்டாம் பரிசு: ரூபாய். 20,000.
பங்கேற்பாளர்களுக்கான பரிசுகள்: பங்கேற்பாளர்களின் படைப்புத்திறனைப் பாராட்டும் வகையில் ஆச்சரியமூட்டும் பரிசுகள் வழங்கப்படும்.

பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம்
காந்தி மண்டபம் சாலை, சென்னை-600 025

## இப்போட்டி குறித்து:

ஆறு முதல் பதினொன்றாம் வகுப்புக்குட்பட்ட குழந்தைகள் இப்போட்டிகளில் பங்கேற்கலாம். இசை வாத்தியங்களின் ஒலிகள், இயற்கையின் ஓசைகள், அன்றாட வாழ்வின் ஒலிகள், மற்றும் அறிவியலின் இயக்கம், தோற்ற நிகழ்வுகள் மற்றும் உணர்நிலைகளை புதிய முறையில் விவரிக்கும் எந்தவொரு ஒலியையும் பயன்படுத்தி அறிவியல் கருத்துக்களையோ நுட்பங்களையோ விவரிக்கலாம். ஒரு குழுவில் மூன்று முதல் ஐந்து பேர் பங்கேற்கலாம். ஒரே பள்ளியிலிருந்து ஐந்து குழுக்கள் வரை பங்கேற்கலாம். குழந்தைகள் போட்டிக்கான திட்டங்களை விவரிக்கும் ஒலிக்கோப்புகளை (2-5 நிமிடங்கள் நீளமுள்ள) அனுப்பவேண்டும். இந்தப் பதிவுகள், பங்கேற்பாளர்களின் குரலில் எந்த மொழியில் வேண்டுமானாலும் இருக்கலாம்.

போட்டியாளர்கள் இணையத்தில் இருந்து ஒலிகளைப் பயன்படுத்தக் கூடாது மற்றும் செயற்கை நுண்ணறிவினால் உருவாக்கப்பட்ட ஒலிகளையும் பயன்படுத்தக் கூடாது. சமர்பிக்கப்படும் ஒலிப்பதிவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கவேண்டும்:

1. அறிவியலோடு தொடர்புடைய ஒலியமைப்பு
2. அந்த ஒலியமைப்பின் உருவாக்கம் குறித்த விளக்கம்

உதாரணங்களக்கு அருகிலிருக்கும் QR குறியீட்டை SCAN செய்யவும்.

விளையாட்டு முறையில் கற்பித்தல் மற்றும் படைப்புத்திறனை ஊக்குவிப்பதன் வாயிலாக கல்வியை மேம்படுத்துவதே எங்கள் நோக்கமாகும். ஆற்றல் மிகுந்த இளம் ஒலிச்சிற்பிகள் அறிவியல் பயிலும் புதிய முறைகளைக் கண்டறிவதோடு மட்டுமல்லாமல், தங்கள் ஒலி மற்றும் மொழியினை சுயவெளிப்பாட்டிற்கான ஊடகங்களாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்நிகழ்வு அமையும் என்று நம்புகிறோம்.

போட்டியிட 17-02-2025 அன்று விண்ணப்பிக்கவும்
ஒலிக்கோப்புகளை 20-02-2025- க்குள் அனுப்பவும்.

பதிவுசெய்ய, ஒலிக்கோப்புகளைச் சமர்ப்பிக்க மற்றும் ஒலிக்கோப்புகளுக்கான மாதிரிகளை அணுக, கீழே காணும் QR குறியீட்டைச் SCAN செய்யவும்.

## தொடர்புக்கு:

022-22575638

arcoffice@smail.iitm.ac.in

http://thearc.iitm.ac.in

## போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:

முனைவர்.ஹேமச்சந்திரன் காரா
இணைப்பேராசிரியர்,
இந்தியத் தொழில் நுட்பக்கழகம், சென்னை.

முனைவர்.சஜி மேத்யூ
பேராசிரியர்
இந்தியத் தொழில் நுட்பக்கழகம், சென்னை

முனைவர்.நிலேஷ் ஜே. வாசா
பேராசிரியர்
இந்தியத் தொழில் நுட்பக்கழகம், சென்னை

திரு.இ.கி.இலெனின் தமிழ்க்கோவன்,
செயல் இயக்குனர், (முகூபொ)
தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்
சென்னை

## ஒருங்கிணைப்பாளர்கள்:

முனைவர். ஜெ . கார்த்திகா
திட்ட மேலாளர், The ARC

கே. ஆர். சுபிஷா, ஸ்விக்ரிதி சன்யால், சாதிக்.தி
ஆராய்ச்சி உதவியாளர்கள், The ARC

## ஆலோசகர்கள்

முனைவர் ஜேம்ஸ் பொன்னையா,
பேராசிரியர்,
மெட்ராஸ் பல்கலைக்கழகம்

திரு.சுப்ரமணி.எல்,
டெக்கான் ஹெரால்ட்

திரு.ஸ்மிதா சதாசிவன்,
உறுப்பினர், தமிழ்நாடு மாநில மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழு

## ஆதரவாளர்கள்

GREAT EASTERN CSR FOUNDATION